பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் மூலமாக அவர்களுக்கு நஷ்டஈடு தருவது வழக்கம். அப்படிப்பட்ட முயற்சி நடைபெற்றதாகவும், நஷ்டஈடு தரப்பட்டதாகவும் அல்லது நஷ்டஈடு தருவதற்கான தொகை விவாதிக்கப்பட்டதாகவும் சர்க்காருக்கு தகவல் இருக்கிறது.

திரு. நா. காசிராமன் : ஸார், இம்மாதிரி விபத்துக்களெல்லாம் கார்கள் வேகமாக வரும்பொழுது இந்தக் கிளர்ச்சியில் ஈடுபடும் மாணவர்கள் குறுக்கே நின்று தடுப்பதால் ஏற்படுகின்றன. அவர்கள் எங்கே பலாத்காரத்தில் ஈடுபடப் போகிறார்களோ என்று ஒதுக்கமாக இருக்கவேண்டியிருக்கிறது. இப்படியெல்லாம் நடப்பதைத் தவிர்ப்பதற்கு எல்லா பஸ் ஓட்டிகளும், கார் ஓட்டிகளும், லாரி ஓட்டிகளும் 'இந்தி ஒழிக, தமிழ் வாழ்க' என்று அச்சிட்டு ஒட்டிக்கொண்டால்தான் பாதுகாப்பு இருக்கும் என்று ஒட்டிக்கொண்டிருக்கிற அந்த நிலைக்கு வந்து விட்டது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அந்த நிலைக்கு வந்துவிட்டதை அரசுகூட பார்க்கிறது. கார்களிலும், பஸ்களிலும் அம்மாதிரி ஒட்டப்படுவது குறித்து, வேறு சிலர் உண்மையிலேயே அந்த இலட்சியத்தை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று தாங்களாகக்கூட ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

* 307 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Tamilnad Students' Anti-Hindi Council has decided to agitate against the Vividh Bharathi Hindi relays by All-India Radio?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : ஆம். கிளர்ச்சியைக் கைவிடுமாறு தமிழக மாணவர் இந்தி எதிர்ப்புக்குழு கேட்டுக் கொள்ளப்பெற்றது.

திரு. கே. விநாயகம் : இந்தக் கிளர்ச்சி ரேடியோவில் ஒலி பரப்பப்படுகிற அந்த விவித பாரதி இந்தி ப்ரோகிராமை எதிர்த்து கிளர்ச்சி செய்வது என்றால், எந்தவிதமாகச் செய்வதாக நினைத்தார்கள்? எப்படிச் செய்தார்கள்? அதைக் கைவிடும்படி அரசாங்கம் கேட்டுக்கொண்டதனுடைய விளைவு என்ன?

What is the *modus operandi* of the agitation against the relay? Is it at the Delhi Centre or the Madras Centre?

THE HON. THIRU C. N. ANNADURAI : Since the agitation did not take place, I am not in a position to give the details. But what happened was this. When the Anti-Hindi agitation took various shapes, the All-India Radio Station received an anonymous letter purported to be from a student asking the Radio Station to give up the Vividh Bharathi programme and informing that, if it was not given up, the Radio Station would be damaged or something to that effect. On enquiry it was found that there was no student by that name and the letter was as anonymous as it was unauthorised.

1968 மார்ச் 25]

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, சென்னை வானொலி நிலையத்தை மதராஸ் வானொலி நிலையம் என்றும், டெல்லி ஒலிபரப்பில் தமிழ் செய்தி அறிக்கையில் ஆகாசவாணி என்றும் சொல்லப்படுகிறதே, இதை மாற்றுவதற்கு இந்த மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இது மற்றொரு கிளர்ச்சிக்கு வழி கோலாதிருக்கும் முறையில் இந்த அரசு கிளர்ச்சிக்கு வழிகோலாதிருக்கும் முறையில் இந்த அரசு வற்புறுத்திக் கொண்டிருக்கிறது.

* 308 வினா.—**திரு. ஆ. கு. சுப்பையா :**
திரு. சோ. அழகர்சாமி :
திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : } : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டில் நிகழ்ந்த இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் போது போலீஸ் துப்பாக்கிப்பிரயோகத்தினால் உயிரிழந்த மாணவர்கள் குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு வழங்கும் யோசனை ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் என்றால், அதன் விபரமென்ன?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) & (இ) 1965-ம் ஆண்டில் நிகழ்ந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் கொல்லப்பட்டவர்களை அண்டி வாழ்ந்த குடும்பத்தவர்க்கும், உடற் புண் பட்டோர்க்கும் கருணை இழப்பீடு (**Ex-gratia compensation**) வழங்குவது பற்றி இந்த அரசு ஆலோசித்து வருகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் முன்னாள் அரசாங்கம் துப்பாக்கிப் பிரயோகம் செய்து உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு, உயிர் இழந்தவர்களை நம்பியிருந்தவர்களுக்கு, கூடிய விரைவில் இந்த நஷ்டஈடு கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : எவ்வளவு அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னேன்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சார், இந்த அரசாங்கம் அந்தக் குடும்பங்களுக்கு எவ்வளவு தொகை கொடுக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறது என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : எவ்வளவு அவசியமோ அவ்வளவு.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, இந்த 1965-ம் ஆண்டு இந்திப் போராட்டத்தின்போது ராணுவத்தை வரவழைத்து மாணவர்கள், பொதுமக்கள் இவர்களெல்லாம் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டார்களே, அவர்களின் எண்ணிக்கை எவ்வளவு? அப்படிச் சுட்டுக் கொல்லப்பட்டு